**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.61
https://ngmtamil.in/

# பழந்தமிழரின் வாழ்வியலில் கோயில்கள்

**சி.குமுதா,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, இரத்தினம் குளோபல் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-**641021.**

**முன்னுரை**

இறைவனைப் பல்வேறு நிலைகளில் வழிபட்ட மக்கள் இறைவனுக்குக் கோயில்கள் எழுப்பியும், சிறப்புகள் செய்துள்ளனர். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையின் அமுத மொழியாகும். எனவே தான் கோயில் இல்லாக் குறை ஏற்படாதவாறு ஊர் தோறும் திருக்கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. தமிழகத்தில் கோயில் இல்லாத ஊர் இல்லை என்று உறுதியாகக் கூறலாம். அவ்வகையில் பழந்தமிழரின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட கோயில்கள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வானது அமைகின்றது

**கோயில்கள் விளக்கம்**

இறைவனை மூலவரையில் வைத்து வழிபடும் பொது இடம் கோயில் ஆகும். கோயில் என்பது இறைவனின் வீடு ஆகும். "கோ" என்றால் இறைவன் – அரசன் – தலைவன் – கணவன் என்பலாம். "இல்" என்றால் வீடு, ஆகவே, கோ + இல் என்றால் தலைவனின் வீடு, இக்கோயில்கள் அம்பலம், இறைப்பொதுவில், கோட்டம், நகர், பொதுவில், மன்றம் என சுட்டப்பெற்றிருந்தன. கடவுள் அமைந்த இடத்திற்கும், காவல் உறைந்த அரண்மனைக்கும் கோயில் என்பது அக்காலத்தில் பொதுப் பெயராக இருந்தது.

**அக்காலத்தில் கோயில்கள்**

முருகன், கண்ணன், சிவன் முதலிய கடவுளுக்கும் சிறு தெய்வங்களுக்கும் தமிழகத்தில் கோயில்கள் இருந்தன. "சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்" என்று சொல்லப்படுவதால் அக்காலக் கோயில்கள் அழிக்கக்கூடிய மணல், செங்கல், மரம் , உலோகம் இவற்றால் ஆனவை என்று கொள்ளலாம். சிவபெருமான் சிலப்பதிகார காலத்தில் கிபி 2ம் நூற்றாண்டில் அரசனும் அரண்மனை சோதிடன் அறக்களத்து அந்தணர்,கட்டிடத் தொழில் நிபுணர் ஆகியோருடன் சிற்பக்கலை அறிஞரும் சென்று கண்ணகி என்னும் பத்தினிக்குக் கோயில் அமைத்தனர் என்ற செய்தி,

"அறக்களத் தந்தணர், ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்" [1]

என்றும் அடிகளால் தெரிகிறது.

**இடைக்காலத்தில் கோயில்கள்**

கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திர வர்மன் என்ற பல்லவ அரசன் அழிக்கக்கூடிய மண், மரம், செங்கல், உலோகம் இவற்றால் கோயிலை அமைக்காமல் என்றும் அழியாத நிலையில் கடவுளர்க்கு கற்கோயில்களை அமைத்தான். காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில், உலகளந்த பெருமாள் கோயில் முதலியன இம்முறையில் கட்டப்பெற்ற பெருங்கோயில்களாகும். சோழப் பேரரசர்கள் கோயில்களைக் கற்கோயில்களாக மாற்ற முனைந்தனர்

சோழர்கள் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலும், கங்கை கொண்ட சோழபுரமும், தாராசுரத்து சிவன் கோயிலும், திரிபுவன வீரேசுவரமும் சோழர் கால கட்டடக் கலைச் சிறப்பை நன்கு அறிவிப்பனவாகும்.

**பிற்காலத்தில் கோயில்கள்**

விஜயநகரத்தார் முஸ்லீம்களின் தாக்குதலிலிருந்து இந்து மதத்தைக் காத்ததைத் தம் தலையாய கடமையாகக் கருதியதோடு கோயில்களைக் காப்பதில் ஈடுபட்டனர். விஜயநகரத்தார் பாணியில் எழுப்பப்பட்ட கோயில்களை வேலூர், காஞ்சி, திருவரங்கம், குடந்தை ஆகிய இடங்களில் காணலாம். திருமலை நாயக்கர் மகால் இராமேஸ்வரம் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், புதுமண்டபம் என்னும் நாயக்கர் காலத்துக் கட்டடக் கலை வளர்ச்சியை நன்கு உணர்த்துவனவாகும். இவைகளின் காலத்திற்குப் பிறகு கோயில் கட்டடக்கலை நின்று விட்டது எனலாம். இதன்பிறகு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை கோயில் கட்டுவதற்கு ஏற்றதாக இல்லை.

சங்க காலம் முதல் நாயக்கர் காலம் வரைக் கோயில் கட்டடக்கலையானது படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. அவ்வக்காலங்களில் ஒவ்வொரு புதிய கூறு இடம் பெற்று, சோழர்கலை, பாண்டியர் கலை, நாயக்கர் கலை என்று வசதிக்காகக் கூறப்பட்டாலும் அனைத்தும் பண்பாட்டினை உணர்த்தும் வகையில் அமைந்தனவே என்ற செய்தியானது பெறப்படுகின்றது.

**கோயில்களின் வகைகள்**

பண்டைக் காலம் எனப்படுகின்ற சங்க காலத்திலிருந்து இன்று வரை திருக்கோயில்கள் மேலும் மேலும் பெருகியும், விரிவடைந்தும் வருகின்றன. இறைவன் அருள் மணக்கும் திருக்கோயில்களை அக்காலத்திலேயே,

1.பெருங்கோயில்

2.கரக்கோயில்

3.ஞாழற்கோயில்

4.கொகுடிக் கோயில்

5.இளங்கோயில்

6.மணிக்கோயில்

7.ஆலக்கோயில்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

8.மாடக்கோயில்

என வகைப்படுத்தியுள்ளனர்.

“பெருக்காறு சடைக்கணிந்தே” எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் பாடலிலிருந்து கோயிலின் வகைகள் இவையென அறியலாம்”[2]

சிற்ப சாத்திர நூலார் “ஸ்ரீ விஜயம், ஸ்ரீ போகம், ஸ்ரீ விசாலம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீ கரம்” என்னும் வகைகளைக் கூறுவர்.[3]

இவையன்றி திருக்கோயில், குடவரைக் கோயில், கற்றளி, கல்லறைக் கோயில், பஞ்சாயதனக் கோயில், பரிவாரக் கோயில், மரக்கோயில், செங்கற்கோயில் என்பனவும் உண்டென்பர்.

**கோயில்களும் பழந்தமிழரின் சமூகமும்**

எங்கும் நிறைந்து மறைந்திருக்கும் இறைவனின் திருவுருள் ஒருமுகப்பட்டு வெளிப்பட்டு விளங்கும் இடம் திருக்கோயிலாகும். எனவே, தான் திருக்கோயில் வழிபாடே சிறந்தது என வற்புறுத்தப்படுகின்றது. ஆகவே, சமய அடிப்படையில் அமைந்த கோயில்கள் மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்தன எனலாம்.

“குடும்பத்தைக் கோயில் ஆக்கிக் கொள்ள முடியாதவர்கள் துயரங்களைக் கொட்டி அழுவதற்காக ஏற்படுத்திக் கொண்ட இடங்களே, கோயில்கள்” (5)

என்றார் கண்ணதாசன். எனவே தான் நம் முன்னோர்கள் திருக்கோயில்களைத் தம் உயிரினும் மேலாய்ப் பாதுகாத்து வழிவழி மக்கள் உய்ய வழி செய்துள்ளனர்.

“வாழ்க்கைக் கடலில் சிக்கித் துன்புறும் மக்களுக்குத்
திருக்கோயில்கள் மன அமைதியையும், இன்பத்தையும்
வழங்கியருளும் கலங்கரை விளக்கங்களாய்த்
திகழ்கின்றன”(6)

என்று செந்துறை முத்து கூறும் கருத்தானது கண்ணதாசன் கூறும் கருத்திற்குப் பொருத்தமாக உள்ளது.

“ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றைப் பற்றி பேசவோ, முடிவெடுக்கவோ கூடும் ஒரு கூடமாகவும் இருந்தது”(7).

மக்கள் ஆலயம் சென்று இறைவனை தொழுவதால், பயபக்தி அதிகம் ஏற்படுகின்றது. இதனால்

“பொது நன்மைக்குப் பாடுபடும் பொது நலத் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சிக் கூடமே ஆலயம். ஆலயமும் தெய்வபக்தியும் வியாபித்த இடத்தில் ஆணவமும், அக்கிரமம் ஏற்படாத சமாதான பூஞ்சோலையாகத் திகழும், மனிதனை மனிதன் நேசிப்பான்”(8)

என்றார் நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு. எனவே

“ஊரின் நலம் வேண்டியும், நாட்டின் நலம் வேண்டியும் கோயில்களில் ஒன்று கூடி பிரார்த்தனை செய்வதில் தேசபக்தியும், சமுதாய மேன்மையையும் மேம்படுத்துகிறது” (9)

என்ற கருத்தும் ஏற்புடையதாக உள்ளது.

**முடிவுரை**

திருக்கோயிலில் இல்லாத ஊரில் வாழ்ந்தால் வாழ்வு வேண்டிய நெறியினை திருக்கோயில் இல்லாத ஊரில் வாழ வேண்டாம் என வற்புறுத்தினர். எனவே, கோயில் உள்ள ஊரில் வாழ வேண்டும் என வற்புறுத்தினர். "திருக்கோயில் இல்லாத ஊரில் திருவிழாவும், பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும் அவையெல்லாம் ஊரல்ல" என்றும்படி தமிழகத்தில் ஊர் தோறும் திருக்கோயில்கள் அமைத்து அருளாளி பரப்பித் திகழ்கின்றன. இவ்வாறாக பழந்தமிழர்கள் உடல் நலன் மன நலன் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றை மனதில் கொண்டு கோயில்களை எழுப்பியதோடு மட்டுமல்லாமல் அவற்றைப் பாதுகாத்தும் வந்துள்ளனர் என்ற கருத்தானது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

[1]. சிலம்பு, ப-590

[2]. திருநாவுக்கரசர் தேவாரம் தலைமுறை , ப-18

[3]. திருவேங்கடசாமி.,மயிலை.சீனி,நுண்கலைகள்,ப-18

[4]. கோ.தங்கவேலு,இந்தியக் கலை வரலாறு,, பக்-318-319

[5]. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம் (மூன்.பா) ,ப-46

[6]. செந்துறை முத்து -திருக்கோயில் கூறும் தத்துவங்கள், ப-96

[7]. அசோக்ஜி-மதங்களில் விஞ்ஞானம்,ப-79

[8]. நாஞ்சில் விஷ்ணு-இது தான் இந்துமதம், ப-37

[9]. மேலது,ப-38